**FRC**

Register No. | | | | | | | | |

**5086–21**

(For the candidates admitted from 2009–2010 to 2016–2017)

**B.A.B.L./ B.A.LL.B. DEGREE EXAMINATIONS, FEBRUARY 2022.**

(Five–year Regular Course)

Third Year / Fifth Semester

**CONSTITUTIONAL LAW – I**

Time : Three hours

Maximum : 100 marks

**PART A** — (3 × 12 = 36 marks)

**Answer THREE of the following not exceeding 6 pages each.**

பின்வருவனவற்றுள் மூன்றிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

1. Discuss the federal principles and by its application examine how far the Indian Constitution is federal in nature.
கூட்டாண்மை அரசமைப்பின் முக்கிய கூறுகளை விவரித்து அதன்படி இந்திய அரசமைப்பு எந்த அளவிற்கு கூட்டாண்மை தன்மையது என்பதை ஆராய்க.

2. Define 'State' and explain it with decided cases. Whether Judiciary is a 'State'.
'அரசு' என்பதை வரையறுத்து தீர்க்கப்பட்ட வழக்குகளோடு விவாதிக்கவும். நீதித்துறை அரசு ஆகுமா?

3. "The Constitution of India under Article 19 guarantees six fundamental freedoms, however they are not absolute". Explain.
"இந்திய அரசியலமைப்புச் சட்டம் ஷரத்து 19 இன் கீழ் ஆறு அடிப்படை சுதந்திரத்திற்கான உரிமைகளை வழங்குகின்றது. ஆனால் இவை முழுமையானவை அல்ல" – விளக்குக.

4. Discuss the Rights of Religious and Linguistic Minorities to establish and manage educational institutions of their choice.
மொழி மற்றும் மத சிறுபான்மையினர் தங்களுடைய விருப்பப்படி கல்வி நிறுவனங்களை உருவாக்கி நிருவகிக்கும் உரிமைகளைப் பற்றி விவாதிக்க.

5. Explain the right to equality of opportunity in Public Employment. Refer to Mandal Commission case.
பொது வேலை வாய்ப்பில் சமத்துவ உரிமையை விளக்குக. மண்டல் கமிஷன் வழக்கை மேற்கோள் காட்டுக.

**PART B** — (8 × 6 = 48 marks)

6. **Write short answers on EIGHT of the following not exceeding 2 pages each:**
பின்வருவனவற்றுள் எட்டிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் குறுகிய விடைகள் எழுதுக.

   (a) Fundamental Rights and Directive Principles
   அடிப்படை உரிமைகளும் வழிகாட்டும் நெறிமுறைகளும்

(b) Double Jeopardy
இரட்டை இடர்பாடு

(c) Public Interest Litigation
பொதுநல வழக்கு

(d) Loss of Indian citizenship
இந்திய குடியுரிமையை துறத்தல்

(e) Formation of New States
புதிய மாநிலங்கள் உருவாக்குதல்

(f) Protective discrimination
பாதுகாக்கப்பட்ட பாகுபாடு

(g) In Re Berubari Union case
இன் ரீ பெருபாரி யூனியன் வழக்கு

(h) Sarla Mudgal v Union of India
சரளாமுட்கள் எதிர் இந்திய ஒன்றிய அரசு

(i) Right to Education
அடிப்படை கல்வி உரிமை

(j) Secularism.
மதச் சார்பின்மை

**PART C** — (4 × 4 = 16 marks)

**Answer FOUR of the following (in not exceeding two pages each) by referring to relevant provisions of Law and decided cases with cogent reasons.**
பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. Sundaram was arrested on 8.2.2016 and kept at Harbour police station for investigation of an offence of theft. The next day, mother of Sundaram came to know that her son's corpse was found lying on the sea shore. She sends a letter to the Supreme Court alleging that this is a custodial death and claims compensation. Discuss.

சுந்தரம் என்பவர் 8.2.2016 அன்று திருட்டு குற்றத்திற்காக கைது செய்யப்பட்டு விசாரணைக்காக துறைமுக காவல் நிலையத்தில் வைக்கப்பட்டார். மறுநாள் சுந்தரத்தின் பிணம் கடற்கரையில் இருப்பதாக அவர் அம்மாவிற்கு தெரியவந்தது. தன்னுடைய மகனின் மரணம் காவல் இருப்பு மரணம் என்று கூறி சுந்தரத்தின் தாயார் உச்சநீதிமன்றத்திற்கு கடிதம் அனுப்பினார். விவாதிக்க.

8. A prisoner at Puzhal central Prison was extracted labour without paying proper remuneration. The Prisoner challenged that it is a forced labour and is violative of Art. 23 of the Constitution. Discuss. Whether it is a forced labour.

புழல் மத்திய சிறையில் உள்ள கைதியிடம் வேலைவாங்கப்பட்டு அதற்கான ஊதியம் முறையாகக் கொடுக்கப்படவில்லை. மேற்கண்ட செயலானது வலுக்கட்டாயமான வேலையாகையால் அது அரசமைப்பு சட்டம் சரத்து. 23–க்கு எதிரானது என்று கைதி எதிர்கிறார். அது வலுக்கட்டாய வேலை வாங்குதலா என்பதை விவாதிக்கவும்.

9. PUCL. an NGO filed a Public Interest Litigation U/A.32 of the Constitution against the telephone tapping of several political leaders in India by the CBI without any proper guidelines and necessity. Discuss the validity of such telephone tappings.

பியூசிஎல் என்ற அரசு சாரா நிறுவனம் இந்தியாவில் உள்ள அரசியல் தலைவர்களின் தொலைபேசிகளை எந்தவிதமான வழிமுறைகளும் தேவையும் இல்லாமல் சிபிஐ–யால் ஒட்டு கேட்கப்படுவது குறித்து அரசமைப்பு சட்டம் சரத்து – 32–ல் பொது நல வழக்கு ஒன்றை தொடர்ந்தது. இத்தகைய தொலைபேசி ஒட்டுக்கேட்பின் செல்லும் தன்மையை குறித்து விவாதிக்கவும்.

10. A woman challenges the constitutional validity of Section 9 of the Hindu Marriage Act, 1955 which deals with restitution of conjugal rights, on the ground that the provision which compels a woman to live with her husband, against her will, would be a violation of her right to personal liberty under Article 21. Decide.

அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ், மண வாழ்க்கைக்குரிய உரிமைகளை மீட்டளிப்பதை பகுத்தளிக்கும். 1955–ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டத்தின் 9–வது பிரிவின் செல்லுந்தன்மையை எதிர்த்துரைத்தும், அவ்வழிவகை ஒரு பெண்ணை அவளுடைய கணவனுடன் சேர்ந்து வாழும்படி கட்டாயப்படுத்துவதினால், அது அரசியலமைப்பின் 21–வது பிரிவின் கீழ் அவளுடைய தனிநபர் சிறப்புரிமை மீறப்படுகிறது என்ற காரணம் காட்டியும், ஒரு பெண்மணி வாதாடுகிறார். தீர்மானிக்க.

11. A political party in a state called for a 'Bandh'. A Public Interest Litigation was filed against this. The political party claimed that the right to call for a "Bandh" is the fundamental right of a political party under Article 19 (1) (a) and (b) of the Constitution Decide.

ஒரு மாநிலத்திலுள்ள ஒரு அரசியல் கட்சி பொது வேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்தது. இதை எதிர்த்து ஒரு பொது நல வழக்கு தொடரப்பட்டது. அதற்கு அக்கட்சி பொது வேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விடுப்பது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் ஷரத்து 19 (1) (a) மற்றும் (b) யின் கீழ் ஒரு அரசியல் கட்சியின் அடிப்படை உரிமையாகும் என்று கூரியது. தீர்மானிக்கவும.

12. State of Tamil Nadu invited applications for the post of Assistant Commissioner in the Hindu Religious and Charitable Department. One of the condition stated that the candidate should belong to Hindu religion. Is the condition valid?

இந்து அற நிலைத் துறையில் உதவி ஆணையர் பணிக்கான விண்ணப்பங்களை தமிழக அரசு கோரியது. இப்பணிக்கு விண்ணபிக்கின்றவர் இந்துவாக இருக்க வேண்டும் என்பது ஒரு நிபந்தனையாகும். இந்த நிபந்தனை செல்லும் தன்மையுடையதா?